வேலூர் மாவட்டத்தில் சுதந்திர தினவிழா -2018 - ஆகஸ்ட் 15-ம் தேதி கொண்டாடுவது தொடர்பாக விழா முன்னேற்பாடுகள் செய்வது குறித்து மாவட்ட அளவிலான அலுவலர்கள் கலந்துகொண்ட 13.07.2018 அன்று காலை 11.00 மணிக்கு நடைப்பெற்ற கூட்ட நடவடிக்கைகளின் சுருக்கம்.

**கூட்ட நடவடிக்கைகளின் சுருக்கம்**

அ4/16130/2018 நாள்:18.07.2018

வேலூர் மாவட்டத்தில் ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 15-ம் தேதி சுதந்திர தினவிழா வேலூர் நேதாஜி விளையாட்டு அரங்கில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி, மரியாதை செய்தும் காவல் துறையின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றும் மற்றும் பள்ளி பயிலும் மாணவ மாணவியரின் கலைநிகழ்ச்சிகளுடன் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. 2018-ஆம் ஆண்டில் வருகின்ற ஆகஸ்ட் 15-ம் தேதி புதன் கிழமை சுதந்திர தினவிழா சிறப்பாக கொண்டாடப்பட உள்ளதால், மாவட்ட ஆட்சியர் அவர்கள் தலைமையில் 2018-ஆம் ஆண்டின் சுதந்திர தினவிழா கொண்டாடுவது தொடர்பாக 13.07.2018 அன்று வெள்ளி கிழமை காலை 11.00 மணியளவில், 5-வது மாடியில் உள்ள கூட்ட அரங்கில் சம்மந்தப்பட்ட மாவட்ட அளவிலான அலுவலர்களின் கலந்தாய்வு கூட்டம் நடைப்பெற்றது. மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்கள் கூட்ட பொருளினை எடுத்துரைத்தார். இக்கூட்டத்திற்கு துறைசார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

வேலூர் மாவட்டத்தில் வருகின்ற ஆகஸ்ட் 15-ம் தேதி 2018 ஆம் ஆண்டின் சுதந்திர தினவிழா வேலூர் நேதாஜி அரங்கில் கொண்டாடுவது தொடர்பாக சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பணிகள் குறித்து 13.07.2018 அன்று நடைப்பெற்ற கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் அவர்களால் கீழ்கண்டவாறு அறிவுரைகள் வழங்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1. | காவல்துறை கண்காணிப்பாளர், | சுதந்திர தினவிழா விழா அரங்கினை காவல்துறை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து, தக்க பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டும், அணிவகுப்பில் பங்குபெறும் வாகனங்களை (Jeep) நல்ல முறையில் பராமரிப்பு செய்து தயார் நிலையில் வைத்திடவும், தேசிய கொடிகம்பத்திற்கு வண்ணப்பூச்சு செய்தும், தேசிய கொடியை இலகுவாக ஏற்றிட நடவடிக்கைகள் எடுத்தும், விழாவிற்கு வரும் அரசு அலுவலர்கள், பொதுமக்கள், பள்ளி மாணவ மாணவியர்கள் கொண்டுவரும் வாகனங்களால் போக்குவரத்து இடையூறுகள் ஏற்படாதவாறு போக்குவரத்து சீர் செய்தல், மற்றும் பாதுகாப்பு பணிகள் செய்யப்பட வேண்டும்<br><br>விழா நடைபெறும் அரங்கில் சுற்று சுவரில் உள்ள பழுதினை சரிசெய்வது மற்றும் முகப்பு பந்தலில் (Portico) பகுதிகள் சரிசெய்யப்பட வேண்டும்.<br><br>விழா தினத்தன்று வருகை தரும் அனைத்து அலுவலர்களும் எளிதாக அடையாளம் காணும் வகையில் கண்டிப்பாக I.D.Card அணிந்து வர தெரிவிக்கப்பட்டது. |
| 2. | சார்-ஆட்சியர், வேலூர்<br><br>வட்டாட்சியர், வேலூர் | 1) முக்கிய பிரமுகர்களை வரவேற்றல் -<br>2) மரபுசீர்முறைப்படி இருக்கை ஏற்பாடுகள் செய்தல்.<br>3) விளையாட்டு மைதானத்தில் அனைத்து ஏற்பாடுகளையும் ஒருங்கிணைத்தல்.<br>4) தியாகிகளுக்கு பொன்னாடை ஏற்பாடு செய்தல்.<br>5) கோட்டை கொடியேற்று நிகழ்ச்சிக்கு அனைத்து |

| | | |
|---|---|---|
| | | ஏற்பாடுகள் செய்தல்<br>6) விழா ஏற்பாடுகள் முழுமையும் மேற்பார்வை செய்து ஒருங்கிணைத்தல்<br>7) விழா மேடையின் வலது புறம் புகைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிருபர்களுக்கென தனி தடுப்பு (Barry guard) நடவடிக்கை மேற்கொள்ளல். |
| 3. | முதல்வர், அரசு மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனை | விழாவில் பங்கு பெறும் மாணவ/மாணவியர் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோருக்கு முன்னேற்பாடாக அவரச சிகிச்சை ஊர்தி (Critical Care Ambulance) ஒன்று தகுந்த மருத்துவ குழுவினருடன் நிகழ்ச்சி நடக்கும்வரை தயார் நிலையில் அரங்கின் நிறுத்தி வைக்க வேண்டம் என தெரிவிக்கப்பட்டது. |
| 4. | 1) மாவட்ட வழங்கல் அலுவலர், வேலூர்<br>2) வட்ட வழங்கல் அலுவலர், வேலூர்.<br>3) பொது மேலாளர், ஆவின் | கலை நிகழ்ச்சியில் பங்கு பெறும் மாணவ/மாணவிகளுக்கும், தியாகிகள் மற்றும் பத்திரிகை தொலைகாட்சி நிருபர்களுக்கும் சிற்றுண்டி மற்றும் குடிநீர் விநியோகம் ஏற்பாடு செய்தல்.<br>மோர் வழங்க ஏற்பாடு செய்தல் |
| 5. | 1) தனித்துணை ஆட்சியர் (சபாதி), வேலூர்<br>2) தனி வட்டாட்சியர் (சபாதி), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர்<br>3) தனி வட்டாட்சியர் (சபாதி), வேலூர். | 1) சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்கு அழைப்பிதழ்கள் அனுப்ப ஏற்பாடு செய்தல்<br>2) பயனாளிகளை ஒழுங்குபடுத்துதல்.<br>3) சுதந்திர போராட்டத் தியாகிகளை கௌரவித்தல்/ பொன்னாடை அணிவித்தல் |
| 6. | தனித்துணை வட்டாட்சியர் (வரவேற்பு), வேலூர். | முக்கிய பிரமுகர்களுக்கு சிற்றுண்டி மற்றும் தண்ணீர் பாட்டில் டீ, காபி, குளிர்பானம் ஏற்பாடு. |
| 7. | முதன்மை கல்வி அலுவலர், | பள்ளிகளின் மூலம் கலை நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டது. |
| 8. | மக்கள் தொடர்பு அலுவலர் | கலை நிகழ்ச்சிகள் தேர்வு செய்தல் - புகைப்படம் - விடியோ - பத்திரிக்கை விளம்பரம் ஏற்பாடு செய்தல். |
| 9. | உதவி இயக்குநர், தமிழ் வளர்ச்சித் துறை | கலை நிகழ்ச்சிகளை தேர்வு செய்தல். |
| 10. | வட்டாரப் போக்குவரத்து அலுவலர், வேலூர் | 1. கலை நிகழ்ச்சிகளில் பங்கு பெறும் மாணவ/மாணவிகளுக்கு போக்குவரத்துக்கென பேருந்து ஏற்பாடுகள் செய்தல்<br>2. மாணவ/மாணவிகளுக்கு பரிசுப் பொருட்கள் ஏற்பாடு செய்தல். |

| | | |
|---|---|---|
| 11. | செயற்பொறியாளர், (கட்டிடம்) பொதுப்பணித் துறை, வேலூர்.<br><br>உதவி செயற்பொறியாளர், (மின் பிரிவு) பொதுப்பணித் துறை, வேலூர். | விழா, பந்தல் - நாற்காலிகள் இருக்கை ஏற்பாடுகள் - - ஒலி ஒளி – தோரணம் அலங்கார வளைவுகள் ஏற்பாடு. |
| 12. | கோட்டப் பொறியாளர், நெடுஞ்சாலைத் துறை, வேலூர் | கலை நிகழ்ச்சியில் பங்கு பெறும் மாணவ/மாணவியர்களுக்கு கேடயம் பரிசுப் பொருட்கள் ஏற்பாடு செய்தல். |
| 13. | உதவி இயக்குநர் (பஞ்சாயத்து), வேலூர் | கிராம சபா கூட்டம் நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. |
| 14. | இந்து சமய அறநிலையத் துறை | 1. சமபந்தி விருந்து ஏற்பாடு செய்தல்<br>2. திருக்கோயில் வளாகம் முழுமையும் தூய்மையாய் பராமரித்து அனைத்து ஏற்பாடுகளையும் மேற்கொள்வது. |
| 15. | மாநகராட்சி ஆணையாளர், வேலூர். | விழாத் திடலில் சுகாதாரப் பணிகள் மற்றும் குடிநீர் ஏற்பாடு செய்தல். விழா மைதானத்தை தண்ணீர் தெளித்து சமன் செய்ய காவல் துறைக்கு தண்ணீர் வழங்க நடவடிக்கை மேற்கொள்ள. |
| 16. | மாவட்ட தீயணைப்பு அலுவலர் | தீ தடுப்பு முன்னேற்பாடுகள் |
| 17. | நியமன அலுவலர் உணவு பாதுகாப்பு துறை, வேலூர். | மாணவ/மாணவிகளுக்கு தண்ணீர் பாட்டில் ஏற்பாடு செய்தல். |
| 18. | உதவி இயக்குநர்,முன்னாள் படைவீரர் நலம் | 1) சுதந்திர போராட்ட வீரர்களின் வாரிசுகளுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க வட்டாட்சியர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டது. காட்பாடி மற்றும் திருப்பத்தூர் வட்டாட்சியர்கள் தலா ஒரு விட்டுமனைப்பட்டா வழங்குவதாக தெரிவித்தனர். மேலும் அரசு நலதிட்ட உதவிகள் பயனாளிகளின் பட்டியல்களை 31.07.2018 க்குள் சமூக பாதுகாப்பு துணை ஆட்சியர்/ தனி வட்டாட்சியர் (சமூக பாதுகாப்பு) சமர்ப்பிக்க அறிவுறுத்தப்பட்டது. |
| 19. | மாவட்ட சமூக நல அலுவலர் | |
| 20. | மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் | |
| 21. | மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர், வேலூர் | |
| 22. | மண்டல மறுவாழ்வு அலுவலர் | |
| 23. | மாவட்ட மேலாளர், தாட்கோ | |
| 24. | இணை இயக்குநர், வேளாண்மை | |
| 25. | திட்ட அலுவலர், மகளிர் திட்டம், வேலூர் | |
| 26. | மாவட்ட விளையாட்டு அலுவலர் | |

மேற்படி கூட்டத்தில், சுதந்திர தினவிழா அன்று கௌரவிக்கப்படும் சுதந்திர போராட்ட தியாகிகளை அவர்களுக்குரிய இருக்கையில் அமரவைக்கவும், அவர்தம் வாரிசுகளை தனியாக அமரவைக்கவும், தியாகிகளுக்கு சால்வைகள் அணிவிக்கும்போது இருக்கைகளுக்கு நடுவில் போதிய இடவசதி ஏற்படுத்தி ஒழுங்குபடுத்தவும், சால்வைகள் அணிவிக்கும்போது முன்னேற்பாடாக உரிய நேரத்தில் உடனுக்குடன் மாவட்ட ஆட்சியரிடத்தில் எடுத்துதர உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும், அரசு அலுவலர்கள் அனைவரும் கண்டிப்பாக அடையாள அட்டை (Identification Card) அணிந்து விழாவிற்கு வரவேண்டும் என மாவட்ட ஆட்சியர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

மேற்படி கூட்டத்தில், மாவட்ட ஆட்சியர் அவர்கள் வருகின்ற ஆகஸ்ட் 15-ம் தேதியன்று வேலூர் நேதாஜி விளையாட்டு அரங்கில் நடக்கவிருக்கும் சுதந்திர தினவிழாவை சிறப்பாக கொண்டாட அனைத்து அலுவலர்களும் தமக்கு ஒதுக்கப்பட்ட பணிகளை சிறப்பாக செய்து, இவ்விழாவை சிறப்பாக அமைய செய்திட கேட்டுக்கொண்டார்.

இறுதியில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) அவர்கள் கூட்டத்திற்கு பங்கேற்ற அனைத்து அலுவலர்களுக்கும் நன்றி கூறி கூட்டத்தை முடித்து வைத்தார்.

2/2

ஓம்/-சி.அ.ராமன்,
மாவட்ட ஆட்சித் தலைவர்,
வேலூர் மாவட்டம்,
வேலூர்-9.

/ஆணைப்படி/

அலுவலக மேலாளர் (பொது)
20/7/18

பெறுநர்
சம்மந்தப்பட்ட அலுவலர்கள்
நகல்: மாவட்ட ஆட்சியரின் முகாம் உதவியாளர்,, வேலூர்
நகல: மாவட்ட வருவாய் அலுவலரின் முகாம் எழுத்தர், வேலூர்
நகல்: மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) வேலூர்
நகல்: அலுவலக மேலாளர்(பொது), வேலூர்